DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 113 /2023

Deposition of Witness : DW1

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜேஸ்வரி | Father's/Husband's Name : | ஜக்கப்பன் |
| Village | : அண்ணாநகர் | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1)** வாதியும் 2, 3 பிரதிவாதிகள் என்னுடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்தும் அதற்கு கீழ்பக்கம் உள்ள சொத்தும் சேர்த்து மொத்தம் 10 செண்ட் என்றால் சரியல்ல, 11 1/2 செண்ட். வழக்கு சொத்தில் சரவணன் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை வழக்கறிஞருக்கு நான் தான சொன்னேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் வாதி தாவா சொத்தை தனக்கு பாகமாக கிடைத்த சொத்து என்று சொல்லி ஆக்கிரமித்து வைத்திருக்கிறார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்கு கீழ் பக்கம் உள்ள வீட்டில் 3ம் பிரதிவாதி கார்த்திகேயன் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. மேற்படி வீட்டிற்கு கிழக்கு பக்கம் உள்ள நிலம் காலியாகத் தான் உள்ளது.

2) வழக்கு சொத்திற்கு மேல்பக்கம் வருசநாடுமெயின் ரோடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வருசநாடு மெயின்ரோட்டிற்கு மேற்கு பக்கம் உள்ள இடத்தை எனதுஅப்பா எனக்கு தானம் கொடுத்து அதில் நான்வீடு கட்டி குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்ட புஞ்சை நிலங்கள் சம்பந்தமாக எங்களுக்குள் இன்னும் பாகம்பிரித்து கொள்ளவில்லை. எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பாகம் பிரித்து கொடுத்துவிட்டார். அம்மாவின் சொத்துக்கள் இன்னும் பிரிக்கப்படாமல் தான் உள்ளது. தாவாசொத்து மற்றும் அதன் கீழ்பக்கம் உள்ள மொத்தம் 11 1/2 செண்ட் நிலத்தை 22.12.1984, 20.01.1985, 05.01.1985 ஆகிய தேதிகளில் எனது தகப்பனாரின் வருமானத்தில் தாயார் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல, எனது தாயார் கொண்டு வந்த சீதனத்தின் மூலம் வாங்கியது.

3) மேற்படி சொத்துக்களை கிரையம் வாங்கும் அளவிற்கு எனது தாயாருக்கு வருமானம் இல்லை என்றாலும் எனது தகப்பனார் கொடுத்த பணத்தில் தான் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது தந்தையின் சொத்துக்களை பாகம் பிரிக்கும் போதே எனது தாயார் பெயரில் இருந்த கசொத்துக்களையும் பாகம் பிரித்து வாதி மற்றும் 2, 3 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்டு, அதன்பேரில் அவர்கள் பெயரில் தனிப்பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அது மோசடி ஆவணம். 2013 ம் ஆண்டில் தாவா சொத்தை வாதியின் பாகமாக ஒதுக்கப்பட்டு அதில் ரூ,15,00,000/– செலவு செய்து வாதி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் என் அப்பா கட்டிய வீடு. தாவா சொத்து வாதியின் தனித்த சுவாதீன அனுபவத்தில் இருப்பதாலும் அதில் நானும் மற்ற பிரதிவாதிகளும் அவருக்கு இடைஞ்சல் செய்வதாலும் வாதி கோரியுள்ள நிலையுறுத்துக்க ட்டளை பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வாதி தாவா சொத்தில் தான் ஆவின் பால் கொள்முதல் செய்யும் கூடம் வைத்து நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல.

**2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**:

1) வாதி ரோட்டிற்கு மேற்கு பக்கம் உள்ள இடத்தில் தான் பால் பண்ணை வைத் துநடத்தி வந்தார் என்றால் ஆமாம். தாவா சொத்து பாகம் பிரிக்கப்படாமல் தான் இருக்கிறது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எனது தாயார் கொண்டு வந்த சீதன நகையை வைத்து தான் வாங்கப்பட்டது என்றால் சரிதான்.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 11.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN
Digitally signed by E SUGANTHAN
Date: 2026.02.11 16:56:35 +0530

District Munsif,
Aundipatti.